

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.10.2023) கொளத்தூர், ஜவஹர் நகர் 1வது சர்க்குலர் சாலையில் ஸ்ரீ அகஸ்தியர் அறக்கட்டளை சார்பில் கலைஞர் நூற்றாண்டு கட்டணமில்லா உயர் சிகிச்சை வசதிகளுடன் கூடிய கண் சிகிச்சை மையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், ஸ்ரீ அகஸ்தியர் அறக்கட்டளை தலைவர் ரமேஷ், சங்கர நேத்ராலயா தலைமை நிர்வாகிகள் டாக்டர் சுரேந்தரன் மற்றும் டாக்டர் கிரிஷ் சிவ ராவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.10.2023) கொளத்தூர், ஜவஹர் நகர், சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள், பயனாளிகளுக்கு மருத்துவ உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் நேற்று (21.10.2023) சேலம், தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் 100 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடத்தி வைத்து சீர்வரிசைப்பொருட்களை வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, துணை மேயர் திருமதி.மா.சாரதாதேவி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திருமதி.சுவாதி ஸ்ரீ உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து இயக்கம்:

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முயற்சிக்கு வெற்றி நிச்சயம்!

### நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி ஓவியம் அறிக்கை!



சென்னை, அக்.22-

தமிழ்நாடு அரசின் விளையாட்டுத்துறையை மேம்படுத்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சி போற்றுதலுக்குரியது எனவும், 'நீட்' எனும் அரக்கனை ஒழித்திட அவர் நடத்தும் கையெழுத்து இயக்கம் நிச்சயம் வெற்றிபெறும் எனவும், நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மிக எளிமையான ஆட்சியாளர் என்ற பெயரை தமிழ்நாட்டு மக்கள் இடையே பெற்று இருக்கிறார். எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும் தமிழக மக்களின் நலன் ஒன்றையே பெரிதாக கருதி திராவிட இயக்கத்தின் கொள்கை வீரனாக மேடை பேச்சில் நல்லதை நல்லது என்றும் அல்லதை தீது என்றும் தனது பேச்சால் தீயாய் தெறிக்கவிட்ட உயரிய சிந்தனையும், எளிமையான குணமும் தமிழர்களின் நெஞ்சில் நீங்கா இடத்தை பெற்றுள்ளார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அனைத்து மாணவர்களும் விளையாட்டுத் துறை அவசியம்என்றுவிளையாட்டுத் துறையை மேம்படுத்தி விடுமுறை நாட்கள் என்று கூட பாராமல் விளையாட்டுத் துறை நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்து வருங்கால மாணவர்களை ஊக்குவித்து விளையாட்டுத் துறை மிக முக்கியம் என்பதை நிரூபித்து உள்ளார்.

அதிகம் பேசுவதை விட, அதிக அளவு மக்களுக்கு நன்மை செய்வதையே நான் விரும்புகிறேன் என்று சூளுரைத்து தமிழகம் எங்கும் பம்பரமாய் சுழன்று வரும் அமைச்சர் என்பதில் யாரும் மறுக்க முடியாது. இளைஞர்கள் இடையே விளையாட்டுப் போட்டிகள் நல்ல பண்புகளை வளர்த்து சிறப்பான குடிமகனை உருவாக்குவதில் தீவிரமாக செயல்பட்டு கிராமப்புறங்களிலும் இளைஞர்களின் திறமையை வெளிக்காட்டுவதில் கவனம் செலுத்துவதை மக்கள் மனங்களை வென்று தமிழக நம்பிக்கை நட்சத்திரமாக வருங்கால கழகத்தின் தூணாக இருந்து தமிழக முதல்வரின் பாதையை பின் பற்றி கட்சித் தொண்டர்களுக்கும் தமிழக மக்களுக்கும் தோழனாகவும் உள்ள அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெற்றி என்பது செயலயாற்றுபவர்களுக்கு மட்டும் தான் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு நமது இளம் தளபதி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரவு பகல் என்றும் பாராமல் தமிழக அரசியலில் இதுவரை இல்லாத அளவில் வரலாற்றுச் சாதனை நிகழ்த்தி வருகிறார்.

அது மட்டுமல்ல மாணவர்கள், இளைஞர்களை நல்வழிப்படுத்த எடுத்து வரும் முயற்சிகள் அனைவராலும் பாராட்டப்படுகிறது. தமிழ்நாட்டு மாணவர்கள் உயர்கல்வியில் வெற்றி பெற தடையாக இருக்கும் 'நீட்' எனும் கொடூரனை தூக்கி எறிய அமைச்சர் உதயநிதி நடத்தும் கையெழுத்து இயக்கம் நிச்சயம் வெற்றி பெறும். அவரின் பின் அணி வகுப்போம் என்றும், துணை நிற்போம் என்றும் நமது திராவிட இயக்கத்தின் தலைவர் திருமதி ஓவியம் ரஞ்சன் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

கலைஞர் 100 1924 - 2023

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (Mech) அவர்களால் குறுகிய கால மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது.**

இ.பொ.து.ந.க.எண்.எம்1/2167A/N/2023
வடக்கு வட்டார பயன்பாட்டிற்கென (மண்டலம் 1 முதல் 5 வரை) 50 எண்ணிக்கையில் டிராக்டர்களில் பொருத்தப்பட்ட நீரிரைக்கும் பம்புகள் **(4"X4" Size)** அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் 375 மணி நேரத்திற்கு (ஒவ்வொரு பம்பிற்கும்) வாடகை முறையில் பணியமர்த்தும் பணி.

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **30.10.2023** பிற்பகல் **3.00,** மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் **31.10.2023** பிற்பகல் **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு : **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5702 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)**




புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், துரையூர் ஊராட்சி, கீரணிப்பட்டியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.23.57 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (20.10.2023) திறந்து வைத்தார். உடன் அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், ஊராட்சிமன்றத் தலைவர் முருகேசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# நீலகிரி மாவட்டத்தில், "நீலகிரி புத்தகத் திருவிழா"!

### அமைச்சர் த.மனோதங்கராஜ் திறந்து வைத்து, புத்தக அரங்குகளைப் பார்வையிட்டார்!

நீலகிரி, அக்.22-

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு ஆராய்ச்சி மையத்தில், "நீலகிரி புத்தகத் திருவிழா" 20.10.2023 முதல் 29.10.2023 வரை நடைபெறுகிறது. துவக்க நாளான நேற்று முன்தினம் (20.10.2023) பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, புத்தக அரங்குகளை திறந்து வைத்து, பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த கண்காட்சிகளை பார்வையிட்டார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தேசிய விருது பெற்ற மக்கள் இயக்குநர் கவிஞர் சீனு ராமசாமி கலந்து கொண்டார்.

இவ்விழாவில் பால் வளத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் புத்தக திருவிழா நடத்த வேண்டும் என தெரிவித்ததன் அடிப்படையில், மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டத்தில் இந்த புத்தகத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. அதில் நான் கலந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதிலும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, புத்தகத் திருவிழாவினை துவக்கி வைக்க வாய்ப்பு கிடைத்தது மேலும் மகிழ்ச்சியளிக்கிறது. இந்த புத்தகத் திருவிழாவின் நோக்கமானது, மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்களின் புத்தக வாசிப்பு பழக்கத்தினை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலகத்துறை சார்பில் புத்தகத் திருவிழா இன்று தொடங்கி வருகிற 29.10.2023 வரை தொடர்ந்து 10 நாட்கள் மிகச் சிறப்பாக நடத்த அனைத்து வகையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், இந்த புத்தகத் திருவிழாவில் சுமார் 70க்கும் மேற்பட்ட புத்தத அரங்குகள் அமைக்கப்பட்டு, பல்வேறு புத்தகங்கள் பொதுமக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும் மற்றும் சுற்றுலா பயணிகளின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்றால் பல்வேறு புத்தகங்களை படிக்க வேண்டும். அதேபோல் இன்றைய மாணவ, மாணவியர் வாழ்க்கையில் தாங்கள் எண்ணிய இலக்கை அடைய வேண்டும் என்றால், அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதோடு, இலக்கை அடையும் வரை போராடிகொண்டே இருக்க வேண்டும். ஒரு நல்ல புத்தகம் ஒரு மனிதனின் வழிகாட்டியாக இருக்கும். ஆகவே வாசிப்பு பழக்கத்தினை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும் இப்புத்தகத் திருவிழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள், சாதனைகள் குறித்து பொதுமக்கள் தெரிந்துக் கொள்ளும் வகையில், சமூக நலத்துறை, தோட்டக் கலைத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மகளிர் திட்டம், நீலகிரி மாவட்ட ஆணைக் குழு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வனத் துறை, கோஆப்டெக்ஸ், அரசு அருங்காட்சியகம், தமிழ்நாடு சிறைகள் (ம) சீர் திருத்த பணிகள் துறை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, பள்ளிக்கல்வித்துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனை மாணவ, மாணவியர், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பார்த்து பயன்பெற வேண்டும். மேலும், இப்புத்தகத் திருவிழா நடைபெறும் அனைத்து நாட்களிலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள், பழங்குடியினர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது. இன்றைய தினம் சிறப்பு விருந்தினர்களாக தேசிய விருது பெற்ற மக்கள் இயக்குநர் கவிஞர் சீனு ராமசாமி மற்றும் நீலகிரி இசைக்குயில் விஜய் டி.வி சூப்பர் சிங்கர் புகழ் சீதா ஆகியோரின் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. அதேபோல் இன்று முதல் 10 நாட்களும் பல்வேறு கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் கலந்து கொண்டு, இவ்விழாவினை சிறப்பிக்க உள்ளார்கள்.

எனவே 10 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த புத்தகத் திருவிழாவில் ஏராளமான பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், பொது மக்கள், சுற்றுலா பயணிகள் உள்ளிட்ட அனைவரும் பார்வையிட்டு, குறைந்த பட்சம் ஒரு நபர் ஒரு புத்தகமாவது வாங்கி, வாசிப்பு பழக்கத்தினை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், புத்தகத் திருவிழா வெற்றிபெற அனைவரும் பேராதரவு அளிக்க வேண்டும் என பால்வளத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பால்வளத் துறை அமைச்சர், தேசிய விருது பெற்ற மக்கள் இயக்குநர் கவிஞர் சீனு ராமசாமி எழுதிய "புகார் பெட்டியின் மீது படுத்துறங்கும் பூனை" என்ற புத்தகத்தினை வெளியிட்டு, நீலகிரி இசைக்குயில் விஜய் டி.வி சூப்பர் சிங்கர் புகழ் சீதா அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியினை பார்வையிட்டு, பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் கவிஞர் சீனு ராமசாமி "யதார்த்த சினிமாவும், இலக்கியமும்" என்ற தலைப்பில் ஆற்றிய உரை:

இலக்கியம் தாய் என்று சொன்னால், சினிமா குழந்தையாக இருக்கிறது. நல்ல புத்தகங்களை மாணவ, மாணவியர் படித்து வந்தால், நீங்களும் எதிர்காலத்தில் ஒரு சிறந்த எழுத்தாளராக மாற முடியும். ஒவ்வொரு புத்தகமும், பல தகவல்களை அளித்து வருகிறது. அது ஆராய்ந்து மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ள புத்தகங்கள் வழிகாட்டியாக செயல்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல் வாசிப்பு பழக்கத்தினை அதிகரித்து, கல்வி கற்றல் திறனை மேம்பட செய்கிறது. ஆகவே மாணவ, மாணவியர் குறைந்த பட்சம் ஒரு புத்தகமாவது வாங்கி, படிக்க வேண்டும் என உரையாற்றினார்.


அதனைத் தொடர்ந்து, பிற்பகல் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் எழுத்தாளர் மற்றும் திராவிட வரலாற்று ஆய்வாளர் அர.திருவிடம் "வரலாறு" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மேலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் தோடர் இன மக்களின் கலாச்சார நடனங்கள் இடம்பெற்றன.

இவ்விழாவில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட வன அலுவலர் சு.கௌதம், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சௌந்திரராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.கீர்த்தி பிரியதர்சினி, மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்க உறுப்பினர். அருண் மாதவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.தனப்பிரியா, உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், நகர மன்ற தலைவர்கள் திருமதி. வாணீஸ்வரி (உதகை), திருமதி.ச.பரிமளா (கூடலூர்), ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாயன் (எ) மாதன் (உதகை),

திருமதி.எம்.கீர்த்தனா (கூடலூர்), ஆவின் பொது மேலாளர் ஜெயராமன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.ஷோபனா (பொ), முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.கீதா, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. பிரவீணா தேவி, மாவட்ட நூலக அலுவலர் திருமதி. வசந்த மல்லிகா, உதகை வட்டாட்சியர் சரவண குமார், உதகை வட்ட வழங்கல் அலுவலர் திருமதி. மகேஷ்வரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கடலூர் இரெ. இளம்வழுதி**
**அக்டோபர் 22 (1970)**



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிடர் கழக மாணவர் அமைப்புக்கு செயலாளராக இருந்தவர்.

தி.மு.க. தொடங்கிய நாளிலிருந்து பல்வேறு பொறுப்புகளில் செயல்பட்டவர்.

'பொன்மொழி' என்ற கழக இதழை தனது இறுதி காலத்தில் தொடங்கி நடத்தினார்.

தலைசிறந்த வழக்கறிஞராக, தலைமைக் கழகப் பேச்சாளராக விளங்கினார்.

1967ல் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அறிஞர் அண்ணாவால் 'கறுப்பு இளவரசர்' என அழைக்கப்பட்ட இவர், தலைவர் கலைஞரின் ஆருயிர் நண்பர். இறுதி மூச்சு வரை, இயக்கப் பணியாற்றிய பகுத்தறிவு பண்பாளர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**